**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**MCOP.No.54/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.லோகநாதன் |
| Father Name | திரு.தாமோதரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **10.03.2026.**

சாட்சியை திரும்ப அழைத்து, கூடுதல் குறுக்கு விசாரணை செய்ய 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனு எண்.6/2026 மற்றும் 7/2026 தாக்கல் செய்யப்பட்டு, 13.02.2026 அன்று அனுமதிக்கப்பட்டது.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

விபத்திற்கு பிறகு என்னை வாலாஜா அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த போது நான் மயக்க நிலையில் இருந்தேன். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் கேசவன் என்பவர் தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை கேசவன் தான் ஓட்டிச் சென்றார். கேசவன் என்பவருக்கும், எனக்கும் எவ்வித விரோதமும் இல்லை. கேசவன் கொடுத்துள்ள புகாரில் எங்கள் மோட்டார் சைக்கிளுக்கு பின்னால் வந்த டாடா இண்டிகா கார் என் மீது உரசியதால் எனக்கு வலது காலில் காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த விவரம் முற்றிலும் தவறு. அந்த டாடா இண்டிகா வாகனத்தை போலிசார் இது நாள் கண்டுப்பிடிக்கவில்லை என்றால் சரிதான். அந்த புகாரை தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் இது வரை இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் போலிசார் என்னை இது நாள் விசாரிக்கவில்லை. கேசவன் என்பவரை போலிசார் விசாரித்தனரா என்று எனக்கு தெரியாது. சிலம்பு உணவகம் அருகே சென்ற போது கேசவன் அதி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றதாகவும், அதனால் நான் அந்த வண்டியிலிருந்து கீழே விழுந்து விட்டதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பதிவு எண் தெரியாத டாடா இண்டிகா காரை கண்டுப்பிடிக்க முடியாததால் தான் கேசவன் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கேசவன் விபத்தை பற்றி தவறான புகார் கொடுத்ததாக அவருக்கு எதிராக நான் வாலாஜா காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. என்னுடைய

மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பது போல் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.03.10 18:30:57 -0400

I Additional District Judge,
Ranipet.